# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1818/19 - 2013 ජූලි මස 10 වැනි බදාදා - 2013.07.10

*1818/19 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமானசேவைச் சட்டம்***

*2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க, சிவில் விமானசேவைச் சட்டத்தின் 117(பு) பிரிவின் கீழ் சிவில் விமானசேவை அமைச்சராகிய எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அமுல்படுத்தும் ஒழுங்கு விதிகள்.*

*பியங்கர ஜெயரத்ன( பா.உ.),*
*சிவில் விமானசேவை அமைச்சர்.*

*கொழும்பு 01,*
*2013, யுலை 5.*

ஒழுங்குவிதிகள்

*1. இந்த ஒழுங்குவிதிகள், மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தினது விமானத்தளத்தினை பயன்படுத்தும்போது, அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பாக குறிப்பிடப்படுவதுடன், வெளியிடப்படும் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.*

*2. இந்த ஒழுங்குவிதிகள் மூலம் 1801/38 ஆம் இலக்க மற்றும் 2013, மாச்சு 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வாத்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இரத்துச் செய்யப்படும்.*

*3. சிவில் விமானசேவை பணிப்பாளர் நாயகத்தின் தன்விருப்புரிமையின் பேரில் எழுத்து மூலம் விலக்களிக்கப்பட்டதலாலன்றி,*

*மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் அனைத்து விமானங்களும், பின்வரும் தரையிறங்கும் கட்டணங்கள் மற்றும் தரிப்பிடக் கட்டணங்கள் நியதிச்சட்ட சேவை வழங்குநருக்கு செலுத்துதல் வேண்டும்.*

| | | |
|---|---|---|
| *1.* | *தரையிறங்கும் கட்டணங்கள்* | *ஒரு முறை தரையிறங்கும்போது விமானம் கிளம்பும் போதிருந்த நிறையிலிருந்து சகல 10 கிலோ கிராமிற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் நான்கு (4) வீதம்.* |
| *2.* | *தரிப்பிடக் கட்டணங்கள்* | *தரையிறங்கியதன் பின்னர் முதல் மூன்று (3) மணித்தியாலங்களை மிகைபடும் வகையிலான சகல ஆறு (6) மணித்தியாலங்களுக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு குறித்த தரையிறங்கும் கட்டணத்திலிருந்து நூற்றுக்கு பத்து (10%)* |



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*4.* எவ்வாறு இருப்பினும் "*3*" ஆம் பந்தியில் குறிப்பிடுகின்ற தரையிறங்கும் மற்றும் தரிப்பிடக் கட்டணங்கள், மட்டுப்படுத்தப்பட்ட விமான தொழிற்பாட்டாளர்களுக்கு விஷேட கழிவுகள் படி, பொருந்தும் வகையில் தரையிறங்கும் மற்றும் தரிப்பிடக் கட்டணங்களாக பின்வருமாறு உடனடியாக நடைமுறையிலுள்ளவாறு வழங்கப்படும்.

| பொதுவான கட்டணங்களுக்குரிய விஷேட கழிவு வீதங்கள் | | | |
|---|---|---|---|
| கால எல்லை | 18.3.2013 — 17.3.2014 | 18.3.2014 — 17.3.2015 | 18.3.2015 — 17.3.2016 |
| தரையிறங்கும் மற்றும் தரிப்பிடக் கட்டணங்கள் | 50% | 25% | 25% |

மேற்குறிப்பிட்ட மட்டுப்படுத்தப்பட்ட வான் தொழிற்பாட்டாளர்களாக கருதப்படுவது:

(அ) புதிய வாடகை விமான தொழிற்பாட்டாளர்கள்;

(ஆ) புதிய குறைந்த செலவில் வான்சேவைகளை வழங்கும் விமானசேவைக் கம்பனிகள்;

(இ) மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு ஏதேனும் மேலதிக விமானப் பயணத்தடவைகள் அதிகரித்துக் கொள்வதற்காக ஏற்கனவே பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தொழிற்பாடுகளை நடாத்துகின்ற குறைந்த செலவிலான விமானசேவைகள்;

(ஈ) மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு ஏதேனும் மேலதிக விமானப் பயணத்தடவைகள் அதிகரித்துக் கொள்வதற்காக ஏற்கனவே பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தொழிற்பாடுகளை நடாத்துகின்ற முழுநேர சேவைகளை வழங்கும் விமானசேவைக் கம்பனிகள்;

(உ) புதிய முழு நேர சேவைகளை வழங்கும் விமானசேவைக் கம்பனிகள்.

*07-754*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.